3rd March 1969]

திரு. எஸ். ராகவானந்தம்: தலைவர் அவர்களே, ஹார்பர் சேலம் போன்ற சிறைச்சாலைகளில் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் எச்சரிக்கை இல்லாமலே சுட்டுக் கொன்றது இந்த அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அரசுக்கு மாத்திரம் அல்ல அகில உலகத்திற்கும் தெரியும்.

THIRU A. R. DAMODARAN : In reply to a supplementary question of my friend, Thiru M. Ethirajulu, the Hon. the Chief Minister said that precautionary measures of giving warning, lathi-charge, tear-gas, etc., were taken by the Government before ordering firing. Am I to understand that even in chasing dacoits and catching prohibition offenders, this procedure is followed?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவைகள் எல்லாம் இந்த சந்தர்ப்பங்களில் கடைப்பிடிக்க இயலாதவை.

Cars purchased for the use of Ministers

* 94 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether new cars were purchased for the nine Ministers of the Government of Tamil Nadu;

(b) the purpose for which the old cars are utilised;

(c) whether any of the old cars were sold; and

(d) if so, the persons to whom and the price for which they were sold?

அமைச்சர்களின் பயனுக்காக வாங்கப்பட்ட கார்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அமைச்சர்கள் 9 பேருக்கு புதுக் கார் வாங்கப்பட்டதா?

(இ) பழைய கார்கள் என்ன உபயோகத்திலிருக்கிறது?

(உ) பழைய கார்கள் ஏதேனும் விற்கப்பட்டதா?

(எ) அப்படியென்றால் யாருக்கு, என்ன விலைக்கு விற்கப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம். அமைச்சர்களின் பயனுக்காக ஒன்பது புதிய அம்பாஸிடர் கார்கள் அரசாங்கத்தால் வாங்கப்பட்டன.

(இ) முன்னாள் அமைச்சர்களால் பயன்படுத்தப்பட்ட எட்டுக் கார்களில் ஐந்து கார்கள் இத்துறையிலுள்ள துறை வண்டிகள் தொகுப்பிலே (staff car pool) சேர்க்கப்பட்டுள்ளன.

அமைச்சர்கள், தகைசான்ற மற்றவர்கள் முதன்மை பெற்றவர் (V.I.Ps.) ஆகியோரின் பயனுக்காக இரண்டு கார்கள் இராமநாத புரம், செங்கற்பட்டு மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரு கார், ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

(உ) ஆம். துறை கார் ' (staff car) ', எண் : எம்.எஸ்.வி. 7777 ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

(எ) மேற்சொன்ன எம்.எஸ்.வி. 7777-ம் எண் கார் ரூ. 20,500-க்கு கோயம்புத்தூரைச் சேர்ந்த திரு. ஏ.ஜி. ஒசிர்கான் என்பவருக்குப் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

Andipatti Agriculturists' Association

* 95 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that the premises of the Agriculturists' Association at Andipatti near Kottagudi in Melur taluk of Madurai district was affected by fire in the months of January, February 1968;

(b) the cause of the fire accident; and

(c) the amount of loss incurred thereby?

ஆண்டிப்பட்டி விவசாயிகள் சங்கம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1968 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் மதுரை மாவட்ட மேலூர் தாலூக்கா கொட்டக்குடியை அடுத்த ஆண்டிப்பட்டி என்னும் ஊரில் விவசாயிகள் சங்கம் இயங்கும் இடம் தீ விபத்திற் குள்ளானதா?

(இ) தீ விபத்திற்குக் காரணமென்ன?

(உ) எவ்வளவு ரூபாய் மதிப்புக்கு நட்டம் ஏற்பட்டது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) கிராம மக்களிடையே ஏற்பட்ட பகை உணர்ச்சியே இதற்குக் காரணம்.

(உ) ரூ. 150.

Resolution of the Cumbum Panchayat Union.

* 96 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether Cumbum Panchayat Union, Madurai district has passed any resolution in April 1968, and sent the same to the Government requesting the postponement of the collection of loans from the agriculturists; and